முருகப்பெருமான் துணை

**மகான் ஆனாய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**18.11.2021**, வியாழக்கிழமை

1. முருகப் பெருமான் அருளாசி
முழுமை கண்ட தவச்சுடரே
ஆறுமுக அரங்கமகானாக
அவதாரம் உலகில் எடுத்திருக்க
2. இருக்கவே அரங்கன் பெருமைகூறி
இயம்புவேன் துல்லிய ஆசி
கருத்தாக பிலவ தேள் திங்கள்
கணக்காய் ஈர்திகதி குருவாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 02ம் நாள், 18.11.2021 வியாழக்கிழமை)
3. வாரமதில் ஆனாய நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
ஆறுமுக அரங்கன் வழியில்
ஆறுமுகனாரே உபதேசம் அருள
4. அருளும் மெய் ஞானமதை
அனைத்து உலக மக்களும்
வரமென வணங்கி வந்து
வழிகாட்டு முருகா என வேண்டி
5. வேண்டி சடாட்சர தீட்சை
வினை அகற்று என ஏற்று
தொண்டுடன் தொடர்பூசை
தேசிகா என வணங்கிச் செய்திட
6. செய்திட வினை விலகும்
செபதபமுடன் தரும சேவைவழி
அய்யமற பொருளுதவி செய்து
அனைவரும் புண்ணியம் பெருக்க
7. பெருக்கவே நிலைமைகள் மாறும்
புண்ணிய பலமாகத் தேறிட
வருத்தங்கள் யாவும் விலகியே
வளர்ச்சிகள் மாற்றமாகக் காணும்
8. காணவே தொடர் பூசைகள்
கட்டாயத் தருமங்களாகவே
தான தருமம் உலகோரிடைபெருக
தரணியில் பாதுகாப்புக்கு உண்டான
9. ஆனதொரு மாற்றம் கூடி
ஆறுமுகன் அருளும் ஆசியுமாக
ஞானதேசிகன் வழி கூடியே
ஞானயுகமாற்றமும் காணும்

10. காணவே அரங்கனை தேடி
கந்தனே முழுமைபட சூட்சும
ஞானம் தரும் நாள் முழுமதி
நம்பிக்கை வைத்து இதுநாளில்

11. நாளில் பிரணவக் குடில்வந்து
ஞானதீட்சை ஆசிபெற
வேலவன் அருளாசி காட்சி
வந்தருளி உலகோர் ஞானியாவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

ஒவ்வொரு பௌர்ணமி தோறும் ஞானத்தலைவன் முருகப்பெருமான் ஓங்காரக்குடில் ஆசான் அரங்க மகாதேசிகருடன் இரண்டற கலந்து அரங்கரை நாடி வருகின்றவர்களுக்கு ஆசி அருளுகிறார்கள். முருகப்பெருமானும் அரங்கமகானும் வேறுவேறல்ல, இருவரும் ஒருவரேயாகும். முருகப்பெருமானே ஓங்காரக்குடிலாசானாக மாறி காட்சி தருகிறார்கள் என்பது மகான் ஆனாய நாயனார் கூற்றாகும்.

ஆகவே பௌர்ணமி தினத்தில் அரங்கமகானை தரிசிப்பது முருகப்பெருமானை தரிசிப்பதாகும்.